இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 27-06-2024

# நிர்மலா ஏன் மறைக்கிறார் ?

கள்ளக்குறிச்சி விஷச் சாராய மரணத்தில் டெல்லியில் இருந்து மூக்கை நுழைத்திருக்கிறார் ஒன்றிய அமைச்சர் நிர்மலா சீதாராமன். “மாநில போலீஸார் விசாரணையில் உண்மைகள் வெளிவராது. சி.பி.ஐ. விசாரணை தேவை” எனப் புலம்பியிருக்கிறார் நிர்மலா சீதாராமன். “விஷச் சாராய மரணங்களுக்கும் ஆளும் கட்சிக்கும் தொடர்பு இருக்கிறது” என எந்த ஆதாரமும் இல்லாமல் போகிற போக்கில் அவதூறு குற்றச்சாட்டைச் சுமத்தியிருக்கிறார் நிர்மலா சீதாராமன்.

**நிர்மலா சீதாராமனுக்கு மறுபடியும் நிதி அமைச்சர் பதவி தரப்பட்டதைப் பார்த்ததும் பா.ஜ.க. கூட்டணி ஆட்சி அதே பழைய கொடூர ஆட்சியாகத்தான் இருக்கப் போகிறது என்பதை இந்திய நாடு உணர்ந்து கொண்டது. நாட்டில் நடைபெற்ற மிகப்பெரிய கேடுகளுக்கு எல்லாம் நிதித்துறையைக் கையில் வைத்திருந்தவர்தான் காரணம் என்பதை இந்த நாட்டு மக்கள் அறிவார்கள்.**

குறிப்பாக தமிழ்நாட்டில் பா.ஜ.க.வை படுகுழியில் அல்ல, பாதாளத்தில் தள்ளுவதற்கு முதலாவது காரணம் நிர்மலா சீதாராமன். இரண்டாவது காரணம், இங்கிருக்கும் ஆளுநர் ரவி என்பதை ‘நன்றியுணர்வோடு’ நாம் மறக்கப் போவது இல்லை.

திடீரென வானத்தில் இருந்து குதிப்பதைப் போல கள்ளக்குறிச்சி சம்பவம் பற்றி நிர்மலா ஏன் பேசினார்? தமிழ்நாடு கேட்ட வெள்ள நிவாரண நிதியை இன்னமும் தரவில்லை அவர். அதனால்தான் அதை மறைக்க இதைப் பேசுகிறார்.

தமிழ்நாடு நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, டெல்லி சென்று கடந்த 22 ஆம் தேதி நடைபெற்ற நிதி அமைச்சர்கள் கூட்டத்தில் கலந்து கொண்டார். “**இரண்டு இயற்கை பேரிடர்களை தமிழ்நாடு சந்தித்தது. இதற்கான நிவாரண நிதியாக ரூ.37,906 கோடியைக் கேட்டிருந்தோம். ஆனால் ரூ.276 கோடியைத்தான் இதுவரை கொடுத்துள்ளீர்கள். இது தமிழ்நாட்டுக்கு இழைக்கப்பட்ட மிகப்பெரிய அநீதியாகும்**” என்று குற்றம் சாட்டினார். இதற்குப் பதில் சொல்ல நிர்மலா சீதாராமனுக்குத் தொண்டை அடைக்கிறது. ஆனால் அவருக்கு அவசியமில்லாத கள்ளக்குறிச்சியைப் பற்றி திசை திருப்புவதற்காகப் பேசுகிறார்.

நிர்மலா சீதாராமன் கண்ணுக்கு இந்தியாவிலேயே கள்ளக்குறிச்சி மட்டும்தான் தெரிகிறதா? தேசிய குற்ற ஆவணக் காப்பகம் (NCRB) அறிக்கைகளை அவர் பார்த்திருக்கிறாரா?

★ 2017-ம் ஆண்டில் இந்தியா முழுவதும் 1,497 கள்ளச்சாராய வழக்குகள் பதிவாகி, 1,510 பேர் உயிரிழந்தனர். அதிகபட்சமாகக் கர்நாடகாவில் 256 பேரும் மத்தியப் பிரதேசத்தில் 216 பேரும், ஆந்திராவில் 183 பேரும், பஞ்சாபில் 170 பேரும், அரியானாவில் 135 பேரும், புதுச்சேரியில் 117 பேரும் சத்தீஸ்கரில் 104 பேரும் உயிரிழந்துள்ளனர்.

★ 2018-ம் ஆண்டில் 1,365 பேர் கள்ளச் சாராயத்தால் இறந்தனர். இதில், அதிகபட்சமாக மத்தியப் பிரதேசத்தில் 410 பேரும், கர்நாடகாவில் 218 பேரும், அரியானாவில் 162 பேரும், பஞ்சாபில் 159 பேரும், உத்தரப் பிரதேசத்தில் 78 பேரும், சத்தீஸ்கரில் 77 பேரும், ராஜஸ்தானில் 64 பேரும் உயிரிழந்தனர்.

★ 2019-ம் ஆண்டில் கள்ளச் சாராயத்தால் நாட்டில் 1,296 பேர் இறந்தனர். கர்நாடகாவில் கலப்பட சாராயம் குடித்து அதிகபட்சமாக 268 பேர் உயிரிழந்தனர். பஞ்சாபில் 191 பேரும், மத்தியப் பிரதேசத்தில் 190 பேரும், சத்தீஸ்கரில் 115 பேரும், அசாமில் 98 பேரும், ராஜஸ்தானில் 88 பேரும் உயிரிழந்தனர்.

★ 2020-ம் ஆண்டு நாடு முழுவதும் கொரோனா பரவிய காலத்திலும் கூட கள்ளச் சாராய மரணங்கள் நடந்தன. நாடு முழுவதும் 931 கள்ளச் சாராய வழக்குகள் பதிவாகி 947 பேர் உயிரிழந்தனர். அப்போது அதிகபட்சமாக மத்தியப் பிரதேசத்தில் 214 பேரும், ஜார்கண்டில் 139 பேரும், பஞ்சாபில் 133 பேரும், கர்நாடகாவில் 99 பேரும், சத்தீஸ்கரில் 67 பேரும் கள்ளச்சாராயத்தால் உயிரிழந்தனர்.

★ 2021-ம் ஆண்டில் இந்தியா முழுவதும் 708 சட்டவிரோத போலி மது அருந்திய சம்பவங்கள் நடந்தன. அதில் 782 பேர் இறந்து போனார்கள். இந்த மரணத்தில் அதிகபட்சமாக உத்தரப் பிரதேசத்தில் 137 பேரும், பஞ்சாபில் 127 பேரும், மத்தியப் பிரதேசத்தில் 108 பேரும் கர்நாடகாவில் 104 பேரும் ஜார்கண்டில் 60 பேரும், ராஜஸ்தானில் 51 பேரும் இறந்தார்கள்.

**குஜராத் அகமதாபாத் நகரின் மஜூர்காம், நகவ் பகுதிகளில் 2009 ஜூலையில் கள்ளச் சாராயத்துக்கு 136 பேர் பலியான போது அங்கே மோடிதான் முதல்வராக ஆட்சி செய்து கொண்டிருந்தார். உள்துறை அமைச்சராக இருந்தவர் அமித்ஷா. அவர்கள் இருவரும் சம்பவத்துக்குப் பொறுப்பேற்று ராஜினாமா செய்தார்களா?**

**குஜராத்தில் 2022-ல் விஷச்சாராயத்துக்கு 42 பேர் பலியான போது நிர்மலா என்ன செய்து கொண்டு இருந்தார்? அதற்கெல்லாம் நிர்மலா சீதாராமன் கருத்துச் சொன்னாரா? அந்த மாநில அரசுகளைக் குற்றம் சொன்னாரா? இல்லை. எதற்காக தி.மு.க. ஆட்சியைப் பற்றிக் குறை சொல்கிறார்?**

பா.ஜ.க. மரண அடியை நாடாளுமன்றத் தேர்தலில் வாங்கிய மாநிலம் தமிழ்நாடு. படுதோல்வி அடைந்த மாநிலங்களில் கூட ஒரு தொகுதியை யாவது பா.ஜ.க. பெற்றது. ஆனால் இங்கே ஒரு தொகுதியைக் கூடப் பெற முடியவில்லை. 8 தொகுதிகளில் ஜெயிக்கப் போவதாக மோடியை ஏமாற்றி வைத்திருந்தது ஒரு கூட்டம். மோடியையே ஏமாற்றினார்கள் என்றால் இந்தக் கூட்டத்தின் மோசடித்தனத்தைச் சொல்ல வேண்டுமா? அவை அனைத்திலும் மண் விழுந்து விட்டது. **ஒரு தொகுதியைக் கூட பெற்றுத்தர முடியாத தமிழ்நாடு பா.ஜ.க.வுக்கு பா.ஜ.க. அமைச்சரவையில் அமைச்சராக உட்காருவதற்கு கூச்சமே இல்லையா? இதை மறைக்கத்தான் கள்ளக்குறிச்சி கரிசனமெல்லாம்!**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (26.06.2024) தலைமைச் செயலகத்தில், நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன், வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் பி.மூர்த்தி, இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு ஆகியோர் 2024–2025ஆம் ஆண்டிற்கான தங்களது துறைகளின் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்திற்கு முன்னதாக சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.

### தேர்தல் சமயத்தில் இடஒதுக்கீடு பற்றி பேசுபவர் டாக்டர் ராமதாஸ்: 10.5 சதவிகித இடஒதுக்கீடு

# ஏழை வன்னியர் சமூகத்தினர் படிப்பதைத் தடுக்கிறது என்பதே உண்மை!

## சட்டப்பேரவையில் - போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் விளக்கம்!



சென்னை, ஜூன் 26-

சட்டப்பேரவையில், நேற்று முன்தினம் போக்குவரத்துத் துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், “10.5 சதவிகித இடஒதுக்கீடு, ஏழை வன்னியர் சமூகத்தினர் படிப்பதைத் தடுக்கிறது என்பதே உண்மை!” மேலும் அவர், தேர்தல் சமயத்தில் எல்லாம் டாக்டர் ராமதாஸ் இடஒதுக்கீடு பற்றி பேசுவார் என்றும் விளக்கமளித்தார்.

சட்டப்பேரவையில் அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், இதுகுறித்து குறிப்பிட்டதாவது :-

இந்தத் துறைகள் தொடர்பான மானியக் கோரிக்கைகளில் பேசுவதற்கு வாய்ப்பளித்ததைப் போல, இரண்டு நிமிடங்கள் வேறொரு செய்தியையும் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

நேற்று முன்தினம், உறுப்பினர் ஜி.கே. மணி அவர்கள் இங்கே பேசியதற்கு பதிலளித்துப் பேசியிருந்தேன். அவ்வாறு பதிலளித்துப் பேசியதற்கு எதிர்வினையாக இன்றைக்கு திண்டிவனத்திலிருந்து ஒரு குரல் ஒலித்திருக்கிறது. போக்குவரத்துத் துறை அமைச்சருக்கும் இதற்கும் என்ன சம்பந்தம் என்று கேட்டிருக்கிறார்கள். ஓர் அமைச்சரவை என்பது கூட்டுப் பொறுப்பு வாய்ந்தது. தெரிந்த கருத்துகளை இங்கே பதிவு செய்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. எனவே, அந்தக் குரலுக்குச் சொந்தமானவருக்கு சொல்லிக்கொள்கிறேன்: போக்குவரத்துத் துறை அமைச்சராக இருப்பது மாத்திரம் தகுதி அல்ல; திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஒரு தொண்டன் என்ற முறையில் சமூக நீதிக் கொள்கைகளை, எங்களது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் செய்தவற்றை இங்கே பதிவு செய்ய வேண்டியது எங்கள் கடமை. (மேசையைத் தட்டும் ஒலி)

அதேபோல, இதற்கு என்ன புள்ளிவிவரங்கள் இருக்கின்றன என்று கேட்டிருக்கிறார்கள். மற்ற புள்ளி விவரங்கள் குறித்தெல்லாம் நீங்கள் ஓரிடத்திற்கு வாருங்கள், நேரடியாக விவாதித்துக் கொள்ளலாம். நான் ஆதாரத்தோடு பேசுகிறேன். ஒரேயொரு சிறு புள்ளிவிவரம், எல்லோருக்கும் புரிகிற வகையில் நான் சொல்லிவிடுகிறேன். 20 சதவிகித இட ஒதுக்கீட்டை முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் கொடுத்திருக்கிற காரணத்தினால், திண்டிவனத்தில் இருக்கக்கூடிய ஓர் அரசு கலைக் கலைக் கல்லூரியில் சேர்க்கை நடைபெற்றபோது, 100 பேர் சேர்ந்தார்களென்றால், அதில் 20 சதவிகித இட ஒதுக்கீட்டின்படி 20 மாணவர்கள் MBC எனப்படுகின்ற மிகப் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த வன்னியர்கள் சேர்வதற்கு வாய்ப்பு இருக்கிறது. நீங்கள் சொல்கிற 10.5 சதவிகித இட ஒதுக்கீடு வந்தால், 20 பேர் சேர முடியாது. 10 பேர்தான் சேர முடியும். எனவே, இழப்பு யாருக்கு?

வன்னியர் சமூகத்தைச் சேர்ந்த படிக்க வருகின்ற இளைஞர்களுக்கு அது மிகப்பெரிய இழப்பு. அதேபோல, தென் மாவட்டத்தில் இந்த MBC தொகுதியில் இருக்கின்ற சீர்மரபினர்கள் அங்கே முழுமையாகச் சேரமுடியும். இந்த 10.5 சதவிகிதம் அங்கே போகின்றபோது அந்த 10.5 சதவிகிதத்தில் அங்கே சேர்வதற்கு ஆள் இல்லாமல் யாருக்கும் பயனில்லாமல் ஒரு பாதகமான சூழல் ஏற்படும். இங்கிருந்துபோய் தென் மாவட்டங்களுக்கு 200 கிலோமீட்டர், 300 கிலோமீட்டர் போய் படிப்பதற்கான ஒரு வசதி வாய்ப்புகளோடு இருந்திருந்தால், அவர்கள் தனியார் கல்லூரிகளிலேயே படித்து விடுவார்கள்.

வன்னியர் சமூகத்தைப் பொறுத்தவரை, இந்தப் பகுதியில் இருப்பவர்கள் ஏழைச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் படிப்பதைக் கூட, தடுப்பதாகத்தான் இந்த 10.5 சதவிகிதம் இருக்கிறது. மற்ற வேலைகளுக்குப் போவது போன்றவற்றையெல்லாம் பின்னர் பேசிக் கொள்ளலாம். இதற்கு இந்தத் தேர்தல் நேரத்தில் இவர்கள் இதை வைத்துப் பேசுவார்கள் என்று எண்ணித்தான் நான் நேற்றே அந்த விளக்கத்தைச் சொன்னேன். அந்த விளக்கத்திற்கு அவர் புதிய வடிவம் கொடுக்க விழைந்தார். நான் கேட்கின்ற இந்தக் கேள்விக்கு simple ஆன கேள்விதான். நீங்கள் படிப்பை நிறுத்துகிறீர்கள். இந்த 10.5 சதவிகிதம் யாருக்குப் பயன் தரப்போகிறது? யாருக்கும் பயன் இல்லை. எனவே, தேவையில்லாமல் அதை விதண்டாவாதம் செய்யாமல் விட்டு விட்டு, முதலமைச்சர் அவர்கள் அதை சட்டபூர்வமாக ஏற்பாடு செய்வதற்கு அவை முன்னவர் அவர்களைக் கொண்டு, அமைச்சர் அவர்களைக் கொண்டு, வழக்கறிஞர்களைக் கொண்டு, மிகச் சிறப்பான முறையிலே அதுகுறித்து விவாதித்தார்கள்.

ஆனால், அதிலே என்ன உண்மை இருக்கிறது என்பதை நான் வெளிப்படுத்திய காரணத்தினால் இன்றைக்கு டாக்டர் ராமதாஸ் அவர்கள் துடிக்கிறார்கள். உண்மை இதுதான். இது நீங்கள் சொல்வது. அந்த மக்களை தேர்தல் நேரத்தில் உங்கள் வழிக்கு கொண்டு வருவது. தேர்தல் முடிந்தால் 10.5 சதவிகிதம் பற்றிப் பேசுவதை விட்டு விட்டு அடுத்த வேலைக்குப் போய்விடுகிறீர்கள். எப்போது நாடாளுமன்றத் தேர்தல் வருகிறதோ, சட்டமன்ற தேர்தல் வருகிறதோ, இடைத் தேர்தல் வருகிறதோ, அப்போது மாத்திரம்தான் உங்களுக்கு அது நினைவு வரும்.

ஆனால், திராவிட முன்னேற்றக் கழக அரசு அப்படியல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) என்றைக்கும் சமூக நீதி பேசுகிறவர்கள் நாங்கள். சமூக நீதிக்கு authority என்றால் தலைவர் கலைஞர் அவர்கள்தான். We are the authority of Social justice. எனவே, நாங்கள் சொல்வதை மக்கள் உணர்வார்கள். நியாயத்தை உணர்வார்கள். இந்த வாய்ப்பைக் கொடுத்தமைக்கு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் குறிப்பிட்டார்.

